கீழ் வயறு இரைச்சலிடும். வயிறு கடுத்து நோகும். குஞ்சடவே மோதி விழும். வெளியிற் தோன்றும். தாரைக்கும் சீழ் மிகவும் சலி கேடாகும். தங்கு சமலங் களிந்து முத்தே வலியுந் தேகனும். நாள் வழியே உடம்பு வற்றும். வெளுப்பு முண்டாம். நாவறளும். சோபமுடன் துயரமுண் டாம். கேளை நாம் மூலமது கிருமி என்றும் கேவலமாய் முனியுரைத்த மார்க்கமாமே.

<u>பித்த சுரத்துக்கு:-</u>

நாயுருவி வடவேரை எடுத்தெடுத்து நலம் பெறவே மிளநீரில் குடிக்க நன்று
மாயாத புளியறளை கிழங்கு தன்னை மாவுடனே மோர் கூட்டி அரைத்து தின்ன
வேயாமல் வோடும் ப்ரமேகம் கெர்ப்ப ரோகம் முதறமாய் சிறுமி செயய உள்ள தெல்லாம்.
துய்யமதாய் கிழிந்து போமென்றென்னி தொல்லுலகில் மாமுனிவர் சொன்னார் தாமே.

கடுக்காய், கடுகுரோகணி, முந்திரிகைப் பழம், சுக்கு இது கூட்டி சட்டியில் போட்டு படி தண்ணீர் விட்டுக் கால் படியாக காய்ச்சி மூன்று நாள் குடிக்கவும். பத்தியம் கடிசாயிருக்க வும்.

லவங்கம் பற்றும் பழைய ஆரியம் ஒரு பிடி வில்வ ஓடும் கூடப் போட்டு படி நீர் விட்டு உழக்காய்ச் காய்ச்சிக் குடிக்கவும். சாட்டரணை சமூலம் சிந்தமுட்டி வேர், பேராமுட்டி வேர், நெரிஞ்சில் வேர், பேய்ப்புடல் விஷ்ணு காந்தி, கண்டங்கத்திரி, தூதுவளை பற் படாகம், பொன்னுங்கண்ணி, நரிப்பயறு, சமூலம், சுக்கு, கடுக்காய், திப்பிலி இது கூட்டி படி தண்ணீர் விட்டு கால்படியாக காய்ச்சி மூன்று நாள் ஆறு பொழுது குடிக்கத் தீரும்.

வெங்காரம் விராகனிடை.க, சாதிலிங்கம் விராகனிடை.க, நாபி விராகனிடை.க, திப்பிலி விராகனிடை.க, மிளகு விராகனிடை.க, இது கூட்டி எலுமிச்சம் புளியில் மூன்று நாள் மூன்று சாமம் அரைத்து கடலை பிரமாணம் குளிகை பண்ணி இஞ்சி சாத்திலாவது சுக்கு கசாயத்தி லாவது கொடுக்க சுரம் நிற்கும். பத்தியம் துவரம் பருப்பு, முருங்கைக் காய் ஆகும்.

பத்திரி தாளம் விராகனிடை.உ, இது செய்யும் வகை ஒரு குடுவையில் சுண்ணாம்புக் கல் போட்டு அதில் தாளகம் துணியில் முடிந்து சுண்ணாம்பில் வைத்து தண்ணீர் வார்த்து ஆறின பிறகு எடுத்து தாளகம் ஒரு பங்கும் சுண்ணாம்பு மூன்று பங்கும் கூட்டி மூன்று சாமமரைத்து பயறு பிரமாணம் குளிகை செய்து சீரக கசாயத்தில் கொடுக்கவும். புளி தவிர்க்கவும்.

ரசம் விராகனிடை.க, வெங்காரம் விராகனிடை.க, லவங்கம் விராகனிடை.க, மனோசிலை விராகனிடை.க, நேர்வாளம் விராகனிடை.க இது சுத்தி செய்து எலுமிச்சம் புளியில் மூன்று சாமமரைத்து உளுந்து மாதிரி குளிகை செய்து இஞ்சி சாத்திலாவது சுக்கு கசாயத்தி லாவது கொடுக்க சுரமென்னப் பட்டதெல்லாம் தீரும்.

நாபி விராகனிடை.உ, வெள்ளை பாஷாணம் விராகனிடை.க, சுத்தி நாபி விராகனிடை.க, கெந்தகம் விராகனிடை.க, நேர்வாளம் விராகனிடை.க, தேத்தாங் கொட்டை விராகனிடை.க, திப்பிலி விராகனிடை.க இந்துப்பு விரகனிடை.க, கடுக்காய் விராகனிடை.க, உத்தாமணி வேர் பட்டை விராகனிடை. இது கூட்டி குப்பமேனிச் சாத்தி அரைத்து சிறு பயறு மாதிரி குளிகை பண்ணி இஞ் சாத்திலாவது சுக்கு கசாயத்திலாவது இட சுர மென்னப் பட்டதெல்லாம் தீரும். பத்தியம் துவரம் பருப்பு, முருங்கைக்காய், மிளகு தண்ணீராகும்.

குரைக் கொம்பு வெட்டி வந்து மேல் பிறணி சீவிப் போட்டு உள்ப் பட்டையை இடித்து சட்டியில் போட்டு தண்ணீர் வார்த்து ஊற வைத்து இறுத்து அதில் அவரை மாதிரி பனைவெல்லம் துக்காணி யிடை சீரகம் கூடப் போட்டுக் கொடுக்கத் தாப சுரம் நிற்கும்.

வல்லாரை இலை கொண்டு வந்து சட்டியில் போட்டுக் கருக்கிக் கொண்டு

படி தண்ணீர் விட்டு கால் படியாக காயச்சி மூன்று நாள் ஆறு பொழுது கொடுக்கவும். ரத்தக் கழிச்சல் நிற்கும். காரம் விட்டு விடவும். வெப்பாலம் பட்டையும் அதின் கொழுந்தும் வெள்ளாட்டுப் பாலில் அரைத்து அந்த பாலில் கரைத்து கொடுக்கவும். பத்தியம் அதே பாலும் புழுங்கலரிசிச் சோறும் சாப்பிடவும். வேறை ஒன்றும் ஆகாது.

<u>ரத்த பிரமேகத்துக்கு சூடல் வாதத்துக்கு:-</u>

காற் மாணிக்கம், முசுமுசுக்கை வெள்ளை வெற்றிலையும் பெரும் பருத்தி இது இடித்து சாறு பிழிந்து சீரகம், சீசர்க்கரைஎலுமிச்சம் இத்தனை வகையும் மூன்று நாள் ஆறு பொழுது கொடுக்கவும் நீர் கட்டும்.

சங்கிலை ஒரு குற்றம் இடித்து பிழிந்து இளநீரில் கலந்து பொட்டிலுப்புங் கூட்டி கொடுக்க கல்லு விழும். ஒவ்வமப்பு பருத்திப் பூ நந்தியா வட்டம் பூ, மல்லிகைப் பூ, கஸ்தூரி, அலரிப்பூ, நாயுருவி விரை இது பொடி செய்து பசுவின் நெய்யிலாக்கி பதினைந்து நாள் முக்கியிட்டு தலைக்கிட்டுத் தேய்க்கவும்.

கீழா நெல்லி வேர் விராகனிடை.உ, பனை வேர் விராகனிடை.உ, பசுவின் பாலிலரைத்து சீரகம், பனைவெல்லம் கூட்டி மூன்று நாள் குடிக்க கல்லு விழும்.

வேளையிலைஇ மிளகும் பொடியும் உள்ளியுங் கூட்டி நெய்யிலாக்கிச் சாப்பிடவும்.

<u>சொருட்டுக்கு:-</u>

வெப்பாலம் பட்டை, சுடலிப்பட்டை இது இரண்டும் அரைத்து சர்க்கரை சீரகம் கூட்டி பசுவின் பாலில் அரைத்து குடிக்கவும். சொருட்டு நிற்கும்.

<u>எலி கடிக்கு:-</u>

முருங்கை வேர் பட்டை உலர்த்தி பொடி பண்ணி நல்லெண்ணை குழைத்து முழுங்கவும். கடி வாய்க்கு கடிவாயில் கட்டவும். எலி கடி தீரும். பத்தியம் கடினம்.

வெள்ளை காக்கிறுன் வேர் கொண்டு வந்து வெந்நீரிலரைத்து காலமே குடிக்கவும். சிறு பிள்ளைகளுக்கு நாலு பாலடை வார்க்கவும். பேதி ஆகாமல் போனால் வெள்ளாட்டுப் பாலிலரைத்து குடிக்கப் பேதியாம். பேதி மிஞ்சியானல் சாதம் அரிசி நொதிதண்ணீர் சாப்பிடவும். கொள்ளு பருப்பு தண்ணீர் புளி தவிர்க்கவும்.

<u>தலை நோவுக்கு:-</u>

ஆலங்கொழுந்து கொண்டு வந்து விரு.யக, உள்ருப் பூண்டு.க, மஞ்சள் கொம்பு க இது கூட்டி வெந்நீரிலரைத்துக் கொதிக்க வைத்து பற்றுப் போடத் தலை நோவு வாங்கும்.

<u>சுரத்துக்கு மாத்திரை:-</u>

ரசம் விராகனிடை.க, திப்பிலி விராகனிடை.க, மிளகு விராகனிடை.க, நேர்வாளம் விராகனிடை.க, இதுவெல்லாம் சுத்தி பண்ணி வெத்திலை ரசத்தில் இரண்டு நாள் நாலு சாமமரைத்து பயறு பிரமாணம் குளிகை பண்ணி சித்திர மூல கசாயத்தில் கொடுக்க சுரம் தீரும்.

<u>வல சலம் கட்டினல் :-</u>

ஈர வெங்காயம் படி.க வேர் முளை வாங்கி இடித்து சாறு பிழிந்து இதுக்கு சரியாய் மோரு விட்டு கொடுக்க பேதியாம். மிளகு நீரும் சோறும் கூட்டவும் வலஞ் சலம் விடும். ஆதண்டந் தழை ஒரு குற்று சட்டியில் போட்டு படி நீர் விட்டு எட்டிலொன்றாய்க் காய்ச்சி குடிக்கவும்.

<u>தாப சுரத்துக்கு:-</u>

கற்பூர வள்ளி ஒரு பிடி சட்டியில் போட்டு நீர் விட்டு எட்டிலொன்றாய்க் காய்ச்சி குடிக்கவும்.

தாப சுரத்

பித்த சுரத்துக்கு:-

சுக்கு மேல் தோல் சீவிப் போட்டு முந்தானியில் முடிந்து படுத்துக் கொண்டு காலமே படுக்கையில் மென்று முழுங்கவும், பித் சுரந் தீரும்.

* முதல் ஏடுகள் விடப்பட்டது.

பர்வதம் தன்னில் வாழும் மறமமுரநுனிமூலே பெருமையாய் உலகு தன்னில் புண்ணிய சனங்களுக்கு உற பல வியாதி வந்தால் உண்மையாய்த் தீர வேண்டி பிறபல முனிவர் தாமும் பேசிய மருந்து கேளே.

அகஸ்தியர் குழம்பு:-

பேசிய மருந்து கேள் பெருங்காயம் கடுகிந்துப்பு வீசிய ர்சம் பொரிகாரம் வேண்டு மரேசிவேயுங் கட்டி ஆசிலாத் திப்பிலியும் அரிதாரம் தகட தாகம் மாசிலா கருஞ் சீரகம் வகை வகை கழஞ்சு வாங்கே.

வாங்கியே மருந்து கேளாய் வாளமும் வறத்தப் பாதி தாங்கிய பச்சை பாதி
சமன் முளை போக்கி நீக்கி தீங்கிலா மருந்து பத் ம் சேரவே அரைக்கும் போது
ஓங்கியே மோருஞ் சோறும் உண்டு நீ யரைத்துக் கூட்டே.

கூட்டியே மருந்தின் பேர்கள் அகஸ்தியர் குழம்பதாகும்
பீட்டியே சுரமே சுக்கு இரும்பலுக் கடுக்காய் சாறும்
வாட்டியே குளிர் சுரங்கள் வருஞ் சுத்தில் மிளகில் கொள்ளும்
பாட்டினில் ரத்த மூலம் நெய்யினிலிப் மேதிப்பாயே.

பாலெலும் மொழியே பாண்டும் மகோதரம் பெரும் வயறும் தீரும்
மேலும் நீராம்பல் சோகை மிளகு தாள் வெள் வெங்காயம் சாலவே சன்னிக் கெல்லாம்
தானிஞ்சி சாற்றிலாமே
மேலெறுஞ் சன்னிக் கெல்லாம் வேப்பம் நெய் தன்னில் கூட்டே.

விடுங் கன்னில் பர்தி வீங்கிலுல் கத்தாழம் சோறும்
வடி தயிர் சந்தனங்கள் வைத்து நீர் கட்ட மாறும்
படும் பெரும் பிளவை வாழை பக்கரை யாப்பு புண்கள்
விடும் பெரும் சிலந்திக்கெல்லாம் மிக உமி நீராலே பூசே.

பூசிடும் முலைக் குத்துக்கு புண்ணுக்கு மிகவே யாகும்
குசிகாவலி ஞன்மங்கள் தோனறிலுல் நொச்சிச் சாறும்
காசங்கள் பீனிசங்கள் கண்டிடில் கஞ்சா சாறும்
வாசமாய் வாதகுலை வருஞ் சுக்கு நோக்கும் பாரே.

பாருய் கபால வலி முதலாய் பிசாசும் பறக்கும்திரிபுகை
நேலே யிறங்கும் நீர் செரிப்பு நீர் கல்லடைப்புத் தான் விழுதி
சீருஞ் சிறந்தி கறப்பாறும் நீமம் சங்கம் குப்பி தனில்
பேருங் கட்டிக்கு பல விஷமும் பெருகத் தீரும் திரிப்புடியே.

பிடிக்குந் திரியே யம்மி தனில் பிறட்டி யுருட்டி திரியத னே
யிடிக்கும் வலிக்குந் தனுர்வாதம் விடஞ் சே போகும் திரிப்பிடியே
குடிக்கும் கசாயம் வெங்காரம் கொடிய கழஞ்சு முசுமுசுக்கை நொச்சில்
அடிக்கும் சன்னி பதிமூன்றும் அநுபானஞ் செய் நூல் விதியே.

விதியால் மருந்து யிது வல்லால் வேறே தேட வேண்டாங் காண்
பதியாம் நாலாயிரத்துக்கும் மூ த்த நாற்பத்தெட்டுக்கும்
விதியா யிதுக்கு குறிப்பறிந்து வகை யநுபானங்கள் செய்தால்
அறத்தியாம் நீமென்று சொல்லி தாயாம் முனிவர் சொன்னுரே.

சொன்னார் மடவார் தங்களுக்கு சுகமாங் கெற்பம் வரும்படி கேள்
மின்னே அறுகங் கொழுந்துடன் மேலாவின் பால் தனிலரைத்து முன்னூர் குழம்பு
பலவிடை தான் முடி மூன்று நாள் கொடுக்க
பெண்ணே புதல்வருண்டாகும் புவியோர்க் கெல்லாம் கண்டாயே.

கண்டீர் நாகப் பட்டை தனில் கருத்தாட்டுப் பால் தனில் கூட்டி
உண்டால் சுகத்தில் வாய்வு ஒயந்த வாய்வுந் தான் தீரும்
வண்டே குழலே சேர் மடமயிலே மலை சேர் முனிவர் வகுத்த மையே.

வகுத்த பிரமன் வகையாலே வருகுஞ் சூசிகா வாய்வுடனே
திரட்டி மிகுத்த வலியு மந்த தீருமென்று மென்று சொன்னேன்
மிறகுடனே மிகுந்த நொச்சிசாறு தன்னில் மிதங்க சாறுடன் வேர் மிளகு சுக்கு
தொகுத்தோ டிப்பு பலவிடை தான் சொன்னேன் வெந்நீர் கொள்வீரே.

வலி நெஞ்சில் வலி தனக்கும் வகையாய் மருந்து தான் கேளீர்
வெல்லம் லவங்கப் பத்திரியும் விரை சேர் குரும்பு அதிமதுரம்
செல்லுந் தாளிசி பத்திரியுடன் சிறந்த ஆவின் வெண்ணையுடன்
அல்லல் தீர்க்கும் குழம்பது தான் பலவிடை அளவும் அருந்திடுமே.

அருந்த தாளி இலை மென்றும் ஆவின் வெண்ணை அளவுடனே
பொருந்துங் குழம்பு பலவிடை ரெண்டும் போத சேர்த்துக் குடிப்பீரே
பொருந்தும் விளையால் வரும் விடமும் போமம் பாரும் பெரியோர்கள்
வருந்தி மின்ன மற்ற் தறிக்கும் வழியாய்ச் சொன்னோ மறிவீரே.

அரிய நாவல் கொழுந்துடனே வாய்த்த மிளகு விராகனிடை ரெண்டும்
முறையா யரித்த வெள்ளிலை தான் மீண்டுங் குழம்பு பலவிடை தான் சுட்டு
யுமி நீரில் வாங்குங் கிப்பிலே மடமயிலே வழலை கடிக்கு நீ கேளே.

கோளாய் வெல்லம் புகை யறல் கிளியே மித்த பேய்ப் பீர்க்கும்
நாளே சென்ற விரை மூன்றம் நன்குங் குப்பை மேனிப் பால்
ஆளே மிவை மருந்தரைக்கு முன்னே அப்பாற் குழம்பு பலவிடை தான்
வேளே கொடுக்க வல்லீறும் விடுமே வழலை விழுந்தானே.

தானே செய்யான் வலி தனக்குச் சாத்தும் மருந்து தனைக் கேளும்
மானே பழைய புளி வெல்லம் வகையாய் சித்திர மூலமுடன்
தேனே குப்பை மேனியின் பால் திடமாய் விட்டுச் சேர்த்தரைத்து
வானோர் குழம்பு பலவிடை தான் வகையாய்க் கொடுக்க வலி போமே.

வலியே செய்யுந் நீர்க், கடுப்பு மாத்த மருந்து தனைக் கேளும்
நலிய மிளகு பொரிக்காரம் நலமாய்ப் பொரித்து எடுத்துக் கொண்டு
வலியாம் குழம்பு பலவிடை தான் மதித்துக் கொடுக்க போய் விடுமே.

பிணியாம் விடபாகத்துடனே பின்னும் வீக்கந் தனைத் தீர்க்கத்
தனியாம் நொச்சி சாறுடனே சொல் நீர் கருக்குடன் கூட்டி
மணியாங் குழம்பு பலவிடை தான் வகையாய்ச் சேர்த்துக் கொடுப்பீராம்
கெணியா யெழுந்த வீக்க மெல்லாம் கெடுமே சொன்னோம் கேளாயே.

கேளா யிந்த வகைகளெல்லாம் கிளியே பேதி மிகவுண்டாம்
பாலாம் பழைய வசம்பு சுட்டு பாங்காய் கசாயம் வைத்ததிலே
ஆழு வெண்ணை பாக்களவும் சுருக்காய்க் கூட்டிக் கொடுப்பீராய்
மீளா பேதியுள்ள தெல்லாம் மின்னே தீருங் கண்டீரே.

காகர வெண்ணை செங்காரை காவல் முருங்கை வாழைப் பிஞ்சும்
பாரில் முளைத்த நாற்த்தங்காய் பராத்து காய்க்குந் துவரை
சேருடன் கெதிகளிது செய்தால் தீராக் கழிச்சலுந் தீர்ந்திடுமே.

சவுபாக்கிய லேகியம்:-

நல்ல காயமும் பொன்னரி தாரமும் நாட்டு திப்பிலி காயம் கடுகுடன் வெள்ளை
சூத மனோசிலை யிந்துப்பு, வெங்காரம், கருஞ்சீரகம் கூடவே சொல்லு மொரபல மூலி
சரியிடை ஈர கழி ரெண்டு விராகனிடையுடன் வல்லதாம் விடத் தாரியும் பத்திடை வகுத்
துச் செய்தவர் வில்லவரே.

ஆவதாம் பசும் பாலொரு சேரிலில் அய்ந்திடை விடத தாரியிக் சுத்த கேள்
லேக விட்டு அழாவிச் சுவறிடவே நடிக் கருகாமலிறக்கிப் பின்
பாகமஞ்சிடையம் மயல் சேரிலிப் படுக்கு படுக்குழுப மூன்று வெட்டிருமாக.

பக்குவம் தன்னிலிறக்கியே மண்சேட்டை கொட்டிக் ஊமுக்கு வித்திடும்
குவித்த மண்ணில் வருத்திடும் தாரியும் கொண்ட பாலினில் வெந்திடு தாரியும்
பரித்து சுத்த விடம் முளைத்தனை விளைந்த சத்தியதாக எடுத்திடும் /
விரும்பி சுற்றி எருக்கமரின் சாலியில் வெங்காரத்தைப் புதைத்துக் கழுவிட்டபின்
அறிந்து ஒக்கவே வகை வகையாகவே தெரிந்து பற்றும் நெகிழ்ந்தவர பாகமாய்
பாகமத்தோடு லேகியம் செய்திட ஏக மத்தொடு அம்மி அகன்டதாம்
ஆகமத்தொடு அய்ங்கரனைத் தொழ அரிந்தரைக் குருவே நமஸ்கரி
வேகமத்தொடு கடுகு கருஞ்சீரகம் விட்டு திப்பிலி நேற நெகிழ்ந்த பின்
மேதமத்தரி தார மனோசிலை நேற யிட்டரை மின்னல் மறைந்திட மாற்ற
போத வெங்காரம் யிந்துப்பு மந்தாரக்கினி காறமுமே யிடு
எழைத்திட்ட விந்தாரியை வைத்திடு ஏக மூலிகை சூதத்தை யிட்டிடு
அரைக்கும் நேரமும் சாமமோ யாமமே ஆட்டி வாங்கு சவு பாக்கிய லேகியம்
மறந்து நீர் படப் போது பத்திரம் மகா விவேகரும் திறந்திடும் சத்தியம்
வாத பித்த சிலேஷ்பனத்தால் வரும் வருத்த ரோக மிதற்கரி கூறுவோம்
வாத மெம்பது நாலது வானதும் வகுத்த பித்தமும் அருபத்திரெண்டதாம்
காத சேஷ்ப்பமும் கலந்திடும்பத் தொன்னும் கண்ட முனித்தில் வந்திடும் ரோகங்கள்
பேத மூலி கனவிதில் பாகத்தில் பாக மூலியிடப் பறந்தோடுமே.
தோட்ட ரோகங்கள் எத்தினை யுள்ளதும் கெட்ட ரோகங்கள எத்தினையுள்ளதும் ஏன்ம மேலங்கள்
எத்தினை யுள்ளதும் நல்ல மந்தன விடங்களெல்லாம் விடும்
பெரிய ரோகங்கள் எத்தினையுள்ளதும் பிரம கோபம் வலிகளும் ஏகிடும்
அரிய கட்டி கிரந்திகளுள்ளதும் அதிகமானதோர் மேகங்கள் தீர்ந்திடும்
குதிரை ஆனை எத்திலையுள்ளதும் கொல்லும் சன்னி சுரங்களும் மேகிடும்
அதிக காந்திகளை எத்தினை யுள்ளதும் அமர்ந்திடும் காதில் எழுந்ததெல்லாம் விடும்
சவுபாக்கிய லேகியம் பிற கண்ட வாயுவாம். சகல ரோகமும் சதகம வாகிடும்
சவுபாக்கிய லேகியமும் சன்யாசமுமாம் சகல ரோகமும் தான் பொடியாயிடும் சவு பாக்கிய
லேகியம் சஞ்சீவியாயிடும் சகல ரோக வினை தீர்ந்திடும்.

மனயிருவிகளறவனு:-

சரீர புஷ்டடியும் வியாதி புஷ்டியு மாயிருந்தால் முதல் நாள் எந்த ரோகத்துக்கும் நாலு
மிளகு மூன்று மிளகு பிரமாணம் கொடுக்கவும். மறுபடி தீரும் வியாதி தீருமளவும்
காலமே மிளகு பிரமாணம் அந்திக்கு ஒரு பயறு மரியாதி கொடுக்கவும். இதக்கு விபரம்:
க்ஷயரோகம், மந்தார காசம், இளைப்பு, பித்த காசம் இதகளுக்கு ஏற
வருஷம் வேப்பம் பட்டை கசாயத்திலாவது இஞ்சி ரசம் தெளிவாய் வாங்கி அந்த
ரசத்திலாவது ஓடும் சிவகாசி அதிலே தேன் விட்டு முறிச்சு அந்த தேனிலே யாவது
பாப்பார முள்ளி கிறகாந் சொறி யிடித்த அந்த கசாயத்திலாவது மோடி கசாயத்தி
லாவது கடுக்காய் கசாயத்திலாவது கொடுத்து வரவும் சர்வ வாத பித்தம் சர்வ
குல்ம வல்ல நீமை அழுவை ஆமை கட்டி குதக கட்டி குதக மரியப் பட்ட வியாதி
பதினெட்டு குஷ்டம் வியாதி பெரும் வியாதி இதகளுக்கு நொச்சி கசாயத்திலாவது பிரப்பன்
கிழங்கு ஆ இடித்து ஒரு பானையில் போட்டு மூன்று வள்ள தண்ணீர் விட்டு இரண்டு படியாக

காய்ச்சி உமி காந்தலில் வைத்துக் கொண்டு இந்தக் கசாயத்துக்கு* இஞ்சி ரசத்தில் கொடுக்கவும். பாண்டு ரோகத்துக்கு பசுவின் பாலில் கொடுக்கவும். உடலைத்துக்கு பெருங்கிழங்கு பலம்.க, காய வைத்து இடித்து வஸ்திர காயம் பண்ணி இரண்டு விராகனிடை பெருங்காயம் மிரப்புலா பொரித்து பொடி செய்து கூடப் போட்டு இத்துடனே மூன்று சிறு பயறு மாதிரி லேகம் கட்டி காலமே ஒரு வேளை வெருகடிப் பிரமாணம் சூரணம் போட்டு ஐந்து நாள் ஏழு நாள் கொள்ளவும்.

<u>சூதக கட்டுக்கு</u>:-

தாழ முளை யிடித்துச் சாறு வாங்கி அந்தச் சாற்றிலிடவும். துளை சாறில் பாப் பாற முள்ளி சமூலமும் இடித்து தேங்காய் பிரமாணம் அதிலே கெச்சக் காய் மாதிரி அவித்தம் வைத்து கொடுத்து மத்தியானம் மேல் மெய்ப்பு தண்ணீர் காட்டவும். குதிரை சுலிச்சாக்கு எருமைத் தயிரில் தேத்தாங் கொட்டை பிரமாணம் வைத்துக் கொடுக்கவும். மத்தியானத்துக்கு மேல் பொய்ப்பு தண்ணீர் காட்டவும். சன்னியும் சுரமும் கூடி வந்தால் கோழி முட்டை புதசாய் வாங்கி வந்து வெள்ளரிவிச்சு வெள்ளம் புலி எடுத்துப் போட்டு சட்டியில் சிகப்பு அம்புலி போட்டு சிறு தீயாய் எரிவிட்டு கரண்டியால் நாவி தைலமிறச்சி உள்ளி தைல மிறக்கி பலம்.வ, உள்ளி ஏலம் பலம்.க, வேப்பெண்ணை பலம்.க, இது மூன்றும் கூட்டி வெள்ளைக்கு மிளகு பிரமாணம் கட்டி அந்தி சந்தி மூன்று நாள் கொடுக்கவும். தேன் மரிச்சு அதிலே கொடுக்கலாம். இஞ்சி சாற்றில் கொடுக்கலாம். வெள்ளைப் பண்டு தைலத்தில் கொடுக்கலாம். விடங்கத்துக்கு முளை மூலத்துக்கு பச்சைமிளகு பொடி செய்து வெருகடி அளவில் நாழு பிரமாணம் வைத்து ஐந்து நாளைக்கொடுக்கால் ஐந்து முறை கொடுக்கவும். விஷம் மண்டைக்கு ஏறினால் இருகுடு பிரமாணம் வேப்பெண்ணை யிலாவது உப்பு நீரிலாவது குழைத்து கலிக்கமிட்டு முன் சொன்னபடியே உள்ளுக்கு கொடுக்கவும். கன்னிலிட மறந்து வீக்கிறல் கற்றாழை சோறாவது சந்தனமாவது பசுந் தயிராவது கண்ணில் வைத்துக் கட்டவும்.

உள்மூலம் பிறமூலம் ரத்த மூலம் சீழ் மூலம் இதுக்கு பசுவின் நெய்யில் விழுதில் கொடுக்கவும்.

சர்வ சுரத்துக்கும் சலவை சைத்தியம் தலைப்பாரம் கை கால் குடைச்சல் இதுகளுக்கு கடுக்கு சுக்கு கசாயத்திலிடவும். சைத்திய வேகத்துக்கு சுக்கு கசாயத்திலிடவும். நறுக்கு கசாயத்திலாவது ஆடாதொடை கசாயத்திலாவது கொடுக்கவும். சுரம் இருமலுக்கு கடுக்காய் மூன்றுக்கு ஒரு தரம் கசாயம் வைத்து அந்த நீரிலிடவும்.

குழந்தை பிள்ளைகளுக்கு மாந்தை குணங்கள் மயக்கம் உப்புசம் வலத் சலங்கட்டு இழுப்பு அக்கரம் கொம்மை மாந்தம் யிழ மாந்தம் என்னப்பட்ட காத்துக்கும் பசுவின் பாலிலாவது முலைப் பாலிலாவது சர்க்கரையிலாவது கறப்பன் சாற்றிலாவது பெரிய பிள்ளைகளுக்கு மிளகு பிரமாணமும் சிறு குழந்தைகளுக்கு பச்சை பயறு மாதிரி பிள்ளைகளிட மறிந்து சவுபாக்கிய லேகியம் வைக்க சர்வ வியாதியும் தீரும்.

பேதி அதிகமானால் சிறு பிள்ளைகளுக்கு கஞ்சி நீர் புகட்டவும். காய்ச்சலு புளிப்பு தவிர்க்கவும். தவிற் சுரத்துக்கு துளசி சாற்றிலிடவும். சர்வ குலைக்கு தேனிலிடவும். க்ஷயம் காசம் இருமலுக்கு கடுக்காய் கசாயத்திலிடவும். காக்கை வலி, மசல் வலி சர்வ வலிக்கும் முசுமுசுக்கை கெச்சக் காய்ச் செடி சமூலம் வெள்ளைப் பண்டு கட்டி காசயமும் வைத்து அந்த கசாயத்திலிடவும். அரையாப்பு புண்ணுக்கு முலைச் சிந்தி மேகரணம் சந்து முட்டின் ஆறாத புண்ணுக்கு சர்வ ரணத்துக்கு சங்கங் குப்பி சாற்றிலிடவும். உப்பு, புளிப்பு தவிர்க்கவும். தீராத கொடிய மேகத்துக்கு கொடிய மேகம் நீரொழுகும் ரணங்களுக்கு என்னும் உருந்தும் சரி கட்டி அரைக்கால் படி நீர் விட்டு முப்பது நாழிகை ஊறின நீரிலிடவும். கருக்கு கல்லடைப்பி நீர்க் கடுப்பு அடைக்கல் எரிவு வெள்ளை மேகம் இதுக்கு நச்சுத் தண்ணீரில் துளை நெருஞ்சியை பிசைந்து அந்த நீரிலிடவும், இப்படி அந்த அந்த வியாதி அறிந்து சரீர புஷ்டியு மறிந்து கஞ்சி நீரில் முதல் நாள் நால் மிளகு மூன்று மிளகு பிரமாணம் வைத்து மறுநாள் ஒரு மிளகு பிரமாணம் பச்சை பயறு பிரமாணம்

பிரமாணம் இப்படி சரீர பக்குவ மறிந்து கொடுத்த வரவும்.

இடுப்பு வலி, இடைச்சல் கிறந்தி புண்ணுக்கு இவைகளுக்கு சங்கங் குப்பி பிரப்பன் கிழங்கு கஷாயத்தில் கொடுக்கவும். பத்தியம் தப்பலாகாது.

<u>பாலாண்ட லேகியம்:-</u>

வட்டத் திருப்பி மலைத்தக்காளி நெட்டை பிரமட்டை நீலி நாயுருவி நீரில் முழுங்கி நிலப்பனைக் கிழங்கு கோரைக் கிழங்கு, கோவை காவளை ஆடாதோடை ஆமணக் கஞ்சு வாடாமல்லி, மலைத்தாங்கி நிஞ்வை சிறுங்கி நிலையாவாரை கொன்னை முருங்கை கோடகசாலை நகாகலிம்பை நலந்தாளிலைம், பாகல் பெருமரப்பட்டை நாய் வேளை முன்னை முயம்டை முகத்தாரி பன்னை பறட்டை பருத்த பாவட்டை அத்தி முருங்கை அம்பை துளசி மகத்தி எருக்கு அத்தி ஆவாரை வேலிப் பருத்தி வெதுப்ப நடக்கி பாலை வெப்பாலை பாதிரி சங்கு மாதளை கோங்கு மருமத்தை நாக மாதளை தழைத்த வல்லாரை காரை பிரண்டை கண்டங்கத்திரி, ஆரை கடுகு அரசு வெள்ளறுகு வாழை செருப்படை விழுதி விழுதலை தாழை நன்னி முட்டாள் கிழங்கு புன்னை புல்லாந்தி பெருங்கன்னி செல்லல் சன்னல் சித்திரசம் பட்டை வேளை முக்கா வேளை விசிறி தழுவை பூளை செருப்படை பூனைக்காஞ்சொறி என்று கல்லுருவி எறளி எலுமிச்சை முள்ளுத் தாழை முடக் கொத்தான் வேர், நெல்லி கீழா நெல்லி, நெய் சட்டி பனிசை மல்லி தேள் கொடுக்கு பறங்கி பேய்ச்சுரை தள்ளி யெலைக் கள்ளி கையாந்த கரைகள் சுள்ளிதகரை சூரா யெலிப் பட்டை சீந்திலை சீந்தில் சிலந்தி நாயகமா முடற வெத்திலைக் கொடி வேர் வெள்ளைக் காக்கணம் சுட்டாங் கொடியோட முக்குறங் கிழங்கு, காட்டா மணக்கு கழுதைப் பண்டு, அலரி மந்தாரை ஆதண்டம் கிள கிழப்பை சிறுவைப் பட்டை பேய்புடல் பெருமரம், பேய்ப்பீர்க்கு அரை வேர் ஆவிலை தாமரை ஆகாசத் தாமரை வேலமனை ஊசன் வேர் வெட்டி வேர் தகரை மாவிலிங்கை நுணா மரு விடத் தும்பில் பவு அரசு புங்கு செவ்வகத்தி கருவேப்பிலையோடு கடம்பு காவாளை படு தாமரை குட்டிப்பிராய் முளகறளை கத்தாழை பெருங்கிளா சிறுகிளா முத்தாவரை வெள்ளாவரை முகட்டு நாச்சி வளர் புலி தடக்கி வெள்ளுக் குறச்சி பனாவிய வசளை ஆளை பசளை தென்னம் வேர் பனம் வேர் சிவனார் வேம்பு வேம்பு புன்னைரிந்தரையும் பொன்னுலாவரை வில்வம் வேரும் வேங்கைக் கொழுந்தும் கல்லாம் வேர் கரும் நொச்சி இலையும் அச்சம் கழுனை ஆடு தின்னுப் பாளை பச்ச பயறு பவள காச்சி காஞ் நெரிஞ்சி தடுப்பலடக்கி பாதாள மூலி பரத்தி குளிந்தி நரிப் பயறடன் நதந் தாளி குன்றி ஆகாச கெருடன் அளை செக்கொளி குழங் இத்தி சங்கன் குப்பி சாறு வளை செருங் கொட்டை செவிக முள்ளங்கி மல்லிகை நந்தியா வட்டம் பேயத்தி அகத்தி நன்னாரி அம்மாம் பச்சரிசித் தாளி சென்னாரி செந்தூருவி நெக்கிளி ஆச்சாம் நீர் வத்தாதேக்கு கருங்காலி, கடுங்கொல நிமயும் அல்லி புடுப்பை அளகு மெருகன் கல்லுருவி செம்பு கபாலமிறக்கி நலகுடுக் காழி நத்தைப் பண்டு ஏன்று கருக்காய் பிரப்பன் கிழங்கு பிளா மரப்பட்டை, குர் பனையன் கோபுரந் தாங்கி மெத்தப் பிரளி விடத் தேளி விசிறி கொட்டிக் கிழங்கு குமுந்த வெள்ளறுகு விடத்தலை கிராந்தி விழுதி சிவதை நாமந் தரித்த நாவில் படாத பூமியிலெழுந்த பூண்டு வகையெல்லாம் வன்மையாம் வெட்டி வகைக்கொரு பலமாய் நிறைய நீருசில் நிறத்தே கலந்து பாய் மேல் அகலப் பரப்பியே உலர்த்தி ஆய்வே யெடுத்த அடைத்தொரு சாலில் நேயமாய்ப் பூசை நிலைமையாய் செய்து அன்பாய் யிடித்து அடவுடன் தானாய் யிடிப மாய்ச் சோதித்தெல்லா மருந்தும் கடைத் திரவியமும் கணக்குடன் வாங்கி வாயினால் சொல் வேன் வகையுடன் கேளும் திப்பிலி சுக்காய் செவியம் சம்பராஷ்டிகம், சதுரன மோடி கொம்ப மல்லியும் கோரோசினை சாதிக்காயும் தாளிக்காம் திருகடி சாதிபத்திரி காசக் கட்டியும் கென்று சீக்காய் வெந்தியம் சீரகம், மிளகுடன் சுக்கும் அக்கலாக் காரம் அரிதாரம் ஓமம் சுக்கு வெண்காரம் கருக்குள்ள காயம், திப்பிலி மூலம் சேருங்கொட்டை சர்க்கரை வெல்லம் சடாமாங்கிஷமும் மஞ்சள் வாய் விளங்கம் வசம்பு, கற்கண்டு, யிஞ்சி வெங்காயம் எலுமிச்சம் பட்டை அரக்கு நீலம் ஆயிரியப் பட்டைமறத்தாளம் பட்டை மதுரசிலை கோஷ்டம் நேர்வாளத்துடன் நிறை முற்றும்.

ஏலம், லவங்கம், யிச்சம் பழமும் செண்பக விரையும் செம்மாங் கழலும் பறங்கிப்

பட்டை பச்சிலை கோஷ்டம் குசுமப்பூவும் கொடுக்காய்ப் புளியும் சதகுப்பி சங்கும் சாம்பிராணி கற்பூரம் மதாரி கஸ்தூரி மிருதார் சிங்கு குங்குமப்பூவும் கருங் குங்கிலியம், கருஞ் சீரகம் பெருங்காயம் தேனும் பொடி முத்து சந்தனம் குட்டித் தக்காளி பனம் கொட்டை செம்முள்ளி வெள்ளி வேதாரிப் பட்டை வெள்ளைப் பூண்டு மது சவ்வைமிளகு மருட்டி மொச்சு மைபிச் சாரிக்கரி முல்லை மற்றுமமேகம் வகைக்கொரு பலமாய் பத்தியாய் வாங்கி பலகை மேல் உலர்த்தி வெட்டு மருந்துடன் திட்டமாய்ச் சேர்க்க கட்டளையாயொரு கல்லறல் கனிலே கருத்துடனிருத்தொரு கரண்டியால் தோண்டி சுற்றமாய் முடாவில் சோதித்தெடுத்து வயிறவர் பசை வன்மையாய் செய்ய ரவியில் வைக்காமல் நலமுடன் யெடுத்து வெட்டுமருந்துடன் திட்டமாய்க் கலந்து தேனுடன் ஆவ நெய் சீனி சர்க்கரையும் வாழைப் பழமும் மாட்டாவின் பாலும் கூட்டிய லேகம் குழம்புடன் செய்த விச்சிலேஸ்பரனை வேண்டியே தொழுது உள்ளுக்குக் கொள்ளப் போம் வகை ரோகம், வாத பயித்தியம், பித்த காசம், சீதக் கழிச்சல், சிறந்த நீர்க் கட்டு, மலக்கட்டு, சிரசிர கிரிசம், நீரேறு காசம் நிறைந்த பீலிகையும் மேக இருபத்தொன்றும் அன்னெரி நன்றும் மண்டை குலைவாதக் குரோதம் பித்த சன்னி பிடறி பிசுப்பு மூர்ச்சை குடைச்சல் குன்ம குலையும் வயத்திலெரிப்பும், வறட் காமாலையும் பித்த வெட்டை பிறிக்கும் மூளை வீரிய விர்த்தி வெரி லோக்காளம் செறிக்குட்டு ரோகம் செவிப்புழு மேச்சல் பாரிச வாய்வும் பசு கிரகம் வாய்வும் இப்படி வியாதிகள் எல்லாம் அகன்று தப்ப தவறுமல் சாதிச் சீராகல் காயமும் வச்சிர காயமும நேசமாய்க் கொள்ள நிலைமையதாமே.

சிலிந்த கட்டுக்கு எண்ணெ :-

சீரகம் பலம்.ரு, ஏலம் பலம்.ரு, திப்பிலி பலம்.ரு, கோஷ்டம் பலம்.ரு, அதிமதுரம் பலம்.ரு, லவங்கம் விராகனிடை.க, உள்ளி பலம்.ய, கருநொச்சி ரசம் பலம். செம்முள்ளி ரசம் பலம். , விளக்கெண்ணெ படி க குறை மருந்தெல்லாம் குரளம் பண்ணி எண்ணெ காய வைத்து அதில் பசுரும் கடைச் சரக்கும் உள்ளியும் ஈர வெங்காயமும் முனை வாங்கி இரண்டு பலம் கட்டி ஏகமாய் எண்ணெயில் போட்டு பொன்னிறமாக வருகிற போது இறக்கி வைத்துக் கொண்டு தாய்க்கும் பிள்ளைக்கும் கொடுக்கவும். பத்தியம் உப்பு, புளி தவிர்க்கவும்.

சீதம் இருந்தால் உப்பு போட்டு கொடுக்கவும். எண்ணெ செலவழிந்தால் மறபடி எண்ணெ விட்டுக் காய்ச்சிக் கொள்ளவும்.

இதுவும் :-

விஷ்ணு கார்ந்தி ரசம் படி. , கத்தாழை சாறு படி. , கடுக்காய் பலம்.க, செங்கத்தாரிப் பட்டை பலம்.க, விளக்கெண்ணெ படி.க, எண்ணெயும் பசுரும் மருந்தும் கூடக் கட்டி காய வைத்து பதத்திலிறக்கி வைத்துக் கொண்டு கரண்டி எண்ணெ கொடுக்கவும். பத்தியம் உப்பு, புளி விடவும்.

இதுவும் :-

விளக்கெண்ணெ படி.க, பெருந் தும்முட்டிக் காய்.ட, ஈர வெங்காயம் படி.க, கத்தாழை மடல் பலம்.க, கடுக்காய் பலம்.ய, கருஞ்சீரகம் பலம்.க. கடுகுரோகணி பலம். , சிலந்தி நாயகம் ஒரு பிடி, சென்னி வல்லாரி இலை, எருமுட்டை பீநாறி வேலி (வெற்றுப் கலிப்பி) இறக்கி இறக்கி எண்ணெ வடித்து வைத்துக் கொண்டு மூன்று நாளைக்கொரு தரம் ஒரு ஒவ்வொருக்கு கரண்டி வார்க்கவும். பத்தியம் உப்பு, புளி விடவும்.

மாந்தை வலிக்கு :-

குட்டி பிலா வேர் கொண்டு வந்து மேல்ப் பட்டையை நசுக்கிக் கொண்டு சிற்றுடனே வெங்காயம் பலம்.ரு, உள்ளி பலம்.அ, அரிந்து விளக்கெண்ணெ ஒரு படியில் கலந்து கொதிக்க வைத்து கடை மருந்து ஓமம், சீரகம், கருஞ்சீரகம், கஸ்தூரி மஞ்சள், கடுக்காய், சுக்கு, திப்பிலி, கடுகுரோகணி, அக்கலாகாரம், நவாச்சாரம் இது வகைக்கு பலம். இது எடைஉ கூடப் போட்டு எண்ணெயை பதமாய் காய்ச்சி வைத்துக் கொ.ளவு

..த்தி தவசி முருங்கை வெள்ளெருச்சி ஊசி பொருத்தலை கொவைத்தகரை கொன்றைக் காவளை மனத்தக்காளி சிவனார் வேம்பு நூக வகை பதினெட்டும் இடித்த சாறு பிழிந்து கொண்டு அந்தச் சாற்றில் ஈர வெங்காயமும், கத்தாழைச் சோறும் பெருந் தும்முட்டிக்காய் மேல் தோல் சீவி உள் விரையும் வாங்கிப் போட்டு பிடித்து எண்ணெயில் கலந்து கொதிக்க வைத்து கொதி வந்த பிறகு சாறு விட்டு பதத்திலிறக்கி வைத்துக் கொண்டு கடுக்காய் கருஞ்சேகணி கருஞ்சீரகம் இவ நிறைம் பொடி பண்ணிக் கூடப் போட்டுக் காய்ச்சி பதத்திலிறக்கு நாளை க்கொடுத்தால் ஒரு சுறண்டி உள்ளுக்கு வார்க்கவும். --------பாலபேர்க்கு சுத்தி கொடுக்கவும். மாந்தை தீரும்.

6.3.63.

ஈர வெங்காயம் கனி-----கடுக்காய் அதிமதுரம் வெளிச்சப் பிஞ்சு வசம்பு புலாக் கிழங்கு, கத்தாழைச் சோறு, ஓரிலைத் தாமரை சிற்றரத்தை வேர் இது வெல்லாம் கூட்டி கெந்தகம், நரிப் மருதோன்றி இவ வகைக்கு விராகனிடை.க, சுத்தி பண்ணி பொடி செய்து கூடப் போட்டு ஒரு கொதி வந்த பிறகு இறக்கி வைத்துக் கொண்டு பிள்ளைகளுக்கு அரைக் காசிடை வார்க்கவும். பத்தியம் உப்பு, புளி புகை தவிர்த்து ஒன்பது நாள் விட்டு விடவும்.

<u>பாஷாணம் முறிக்கிறது:-</u>

ரசம் பலம்.க, கல்வத்திலிட்டு மஞ்சள் பொடியிலும் ஓட்டடை ற பொடியிலும் தனித் தனி மூன்று நாழிகை மத்திக்கவும். பிறகு கத்தாழைச் சோறு தன்னி சந்தனம், குழம்பு செம்பருத்திப் பூ ரசம், வெற்றிலை ரசம், பருபாகல்லு ரசம் அழிஞ்சு இலை ரசம் அம்மான் பச்சிலை ரசம், கையாந்த கரை இலை ரசம், சார் வளை இலை ரசம் கொன்றைப் பட்டை கசாயம் இப்படி வகை வகைக்கு மூன்று நாழிகை சுத்தி பண்ண ரசம் சுத்தியாம். அந்தரசம் சகலத்துக்கும் கட்டலாம்.

<u>வெள்ளைப் பாஷாணம் சுத்தி:-</u>

சிறுகச் சிறுகத் தரித்து துணியில் முடிந்து ஒரு குடுவையில் சுண்ணாம்பு தண்ணீர் விட்டு டோலோந்திரமாக கட்டி அறுபது நாழிகை எரித்து ரசம் பலம். பசுவின் பாலிலாற அந்தப்படி தொங்க விட்டு அறுபது நாழிகை எரிக்க சுத்தியாம்.

கெவரி பாஷாணம் பொடி பண்ணிச் சீலையில் முடிந்து பசுவின் பாலில் போட்டு முப்பது நாழிகை சூரிய புடம் வைக்க சுத்தியாம். நெல்லிக்காய் கெந்தகம் நெய்யில் உருக்கில் ஏழு விசை பாலில் சாய்க்க சுத்தியாம். பசுவின் கோமியத்தில் போட்டு பதினைந்து நாழிகை வெய்யிலில் வைத்து எடுத்து நிழலில் வைக்கச் சுத்தியாம். பருத்தி இலை ரசத்தில் பதினைந்து நாழிகை ஊறப் போட்டு எடுத்து ஆமணக்கு இலையில் சுருட்டி உமிக் காந்தலில் ஒரே நேரம் புடமிட்டெடுக்க சுத்தியாம். எருக்கம் பாலில் மூன்று நாள் ஊறப் போட்டு எடுத்துப் பசுவின் பாலில் விட்டுக் கழுவி உலர்த்தி வைக்கச் சுத்தியாம்.

<u>பாஷாணங்கள் சுத்தி:-</u>

<u>சாதிலிங்கம் சுத்தி:-</u>

பொடி பொடியாய்க் கத்தரித்து சிப்பியில் போட்டு எலுமிச்சம் புளி விட்டு பதினைந்து நாழிகை ஊறப் போடவும். முலைப் பாலில் பதினைந்து நாழிகை ஊறப் போடவும். சாதிலிங் கம் சுத்தியாம். முலைப் பாலில்லாவிட்டால் எலுமிச்சம் புளியில் ஐம்பது நாழிகை ஊற வைக்கச் சுத்தியாம். அரிதா

<u>அரிதாரம் சுத்தி:-</u>

பணம் போலே வெட்டி ரெண்டு மடிப்புச் சீலையில் பொட்டணங் கட்டி டோலேந் திரமாகப் பசுவின் கோமியத்தில் ஒரு நாள் வைக்க சுத்தியாம்.

காடியில் ஒரு நாள் வேக வைத்து எடுக்க சுத்தி.

பசுவின் பாலில் ஒரு சாமம் சுண்ணாம்பு தண்ணீரில் ஒரு சாமம் இரு சாமம் வேக வைத் உலர்த்தி வைக்க சுத்தியாம்.

மருதோன்றிலையைப் பணம் போலே வெட்டி துணியில் கட்டி வெள்ளாட்டுக் கோமி யத்தில் - நனைய டோலேந்திரமாக மூன்று நாள் எரித்து எடுத்து கருந்த தண்ணியில் கழுவி

உலர்த்திக் கொள்ள சுத்தியாம்.

துத்தம் சிறுக நறுக்கிப் பொடி பண்ணி சீலையில் முடிந்து நாய் மூத்திரத்தில் ஏழு சாமம் ஊற வைத்து பசுவின் கோமியத்தில் இரண்டு சாமம் டோலேந்திரமாக மூன்று நாள் எரித்து எடுத்து சுடுந்த தண்ணியில் கழுவி உலர்த்திக் கொள்ளச் சுத்தியாம்.

நேர்வாளம் உடைத்துப் போட்டு வாங்கிப் போட்டு தண்ணீரில் கால் நாழிகை ஊற விட்டு எடுத்து மூளை வாங்கிப் போட்டு எருமைச் சாணியில் கால் நாழிகை கொதிக்க வைத்து பிற்கு தாழை மடலில் உள்ளே வைத்து உமிழ் காந்தலில் கால் நாழிகை வைத்து எடுத்து சட்டியில் பால் விட்டு சிறுகீரை அவைத்து சட்டி வாய் துணி கட்டி அதின் மேல் சிறுகீரையை வைத்து அரைக்கால் நாழிகை எரிக்கவும். ஆவாரையிலும் இந்தப்படி எரிக்கவும். வெந்த பிறகு எடுத்துக் கழுவி வைத்துக் கொள்ளவும் சுத்தியாம்.

<u>பாஷாண சுத்தி:-</u>

கடுக்காய், தானிக்காய், முள்ளி வேர், நெல்லி சுட்டு இது நசுக்கி சட்டியில் போட்டு நாலு மானம் நீர் விட்டு நாபியை முடிந்து டோலேந்திரமாக எரிக்கச் சுத்தி.

சாதிலிங்கம் முருக்கன் சாற்றில் மூன்று தரம் தோய்த்து உலர்த்திக் கட்டிக் கொள்ளவும்.

எலி பாஷாணம் செவ்வூரி பாஷாணம் இது இரண்டு பெரும் பாகல் காயைத் தோண்டி அதில் வைத்து அதின் மேல் விரல் கனம் சாணி அப்பி இருபது முட்டையில் புடம் போட்டு எடுக்கச் சுத்தியாம்.

சாதிலிங்கம் தண்ணி விட்டு அரைத்து அடை போல் தட்டி சிறு ----ரகத்தில் பசும் பால் விட்டு சட்டி வாய் கட்டி அதின் மேல் வைத்து மேல் சட்டி மூடி சீலை மண் செய்து பிட்டு போல வேக வைத்து எடுக்க சுத்தியாம்.

<u>எலி பாஷாணம் சுத்தி:-</u>

சீலையில் முடிந்து ஒரு பானையில் கரைத்து பானை வாயை கட்டி ---- மோல் சுத்தியாம். பசும் பாலில் நாபியை அரைத்து சுட சுத்தியாம்.

கெந்தகம் பானையில் இரண்டு படி மோர் விட்டு பானை வாயைக் கட்டி பொன்னுங் கண்ணியும் ---ரைய பிடித்து அதின் மேல் வைத்து மேல் சட்டி மூடி எரிக்க சுத்தியாம்.

வெங்காரம் எருமைச் சாணியில் கழுவி கரண்டியில் வைத்து எரிக்க சுத்தியாம்.

<u>சூழ்ச்சுத்தி:-</u> சாஷம் சுத்தி முறை முற்றும்.

**

<u>தாம்பிர பற்பம்:-</u>

தாம்பிரத் தகடு யீசலிறகு போல் தட்டி காய்ச்சி வெந்நீர் தண்ணீரில் மூன்று தரம் துவைச்சு கத்தாழைச் சாத்தில் மூன்று தரம் இலந்தை சாத்தில் மூன்று தரம் துவைச்சு மரபடி கல்லுப்பு அரைப்படி குடுவையில் போட்டு நல்ல பாம்புக் கண்டம், நார்த்தங்காய் மாதிரி அறுத்து அதில் போட்டு வைக்க தண்ணீராகும். அந்த நீரில் நெல்லிக்காய் கெந்தகம் விராகனிடை.க, ரசம் விராகனிடை. இது இரண்டும் அந்த உப்பு நீர் விட்டு சாமமரைத்து தகட்டுக்கும் பூசி ஒரு சொப்பில் வைத்து சீலை மண் செய்து காட்டு முட்டையில் புடம் போட பற்பமாகும். அந்த பற்பம் ஒரு பணவிடை உள்ளி தயிலம், தேன் இஞ்சி சாறு நல்ல வெல்லம் இதுகளில் தீராத வலி குன்மம் தீரும். பசுவின் பால் குடிக்கவும்

ஒரு குறட்டைக் கிழங்கு காவு தும்பை வேர் சாரணை வேர், கொடிவேலி வேர் செங்கத்தாரிப் பட்டை, பெருங் குரும்பை வேர், அகம் கஸ்தூரி மஞ்சள் உள்ளி வசம்பு சீரகம், பிஞ்சு கடுக்காய் வகைக்கு பலம்.க, கருஞ்சீரகம் பு சித்தரத்தை பேரரத்தை திப்பிலி திப்பிலி மூலம், கடுகு, வெந்தியம், சந்தனம், செ.வலரிக் கொடி, சிறு நாகப்பூ, பிதிர் லோசனி, அதிமதுரம் இது வகைக்கு பலம். , வேப்பெண்ணை உ, நல்லெண்ணை உ இதுக்கு வயணம் வைசூரிகை எல்லாம் ஒரு பானையில் போட்டு பதக்கு நீர் விட்டு நாழியாகக் காய்ச்சி இறுத்துக் கொண்டு தலை முழுகவும்.

இதக்கு தீரும் வியாதி பித்த சன்னி, முக வாதம், கண்ஜேவு, பவுத்திரம் வியாதி எல்லாம் தீரும்.. இதக்கு இச்சா பத்தியம்..

<u>சன்னி வாய்வுக்கு:-</u>

நாமு வருஷத்த வேப்பம் பட்டை கொண்டு வந்து கத்தரிச்சு ஒரு பானையில் உள்ளி பலம்.௫, மிளகு பலம்.௪, கருஞ்சீரகம் பலம்.௪, திப்பிலி பலம்.௨, இவ் வெல்லாம் வேப்பம் பட்டையுடனே கூடப் போட்டு நொச்சித் தழையாலே பானை வாய் மூடி மேல் சட்டி மூடி சீலை மண் செய்து குழி வெட்டி காட்டு விராட்டி போட்டு தயிலம் இறக்கிக் கொண்டு காசளவு உள்ளுக்கு சாப்பிடவும். மேலுக்கு பூசவும். சகல சன்னியும் தீரும்.

<u>தலை நோவுக்கு மருந்து:-</u>

நல்ல வேளை பற்படாகம் இலுப்பை பூண்டுக்கு ----சி நசியம் விடவும். வேளை ரசம் கிடையாவிட்டால் மூலைப் பாலில் இதுகளைப் போட்டு மாபடி சுக்கு பொடி பண்ணி மூர பாகம் ஆகவும். வலி நிற்கும்.

<u>மார்நோவுக்கு:-</u>

ஒரு தலை உள்ளிப் பூண்டு பலம்.௨, மோடி பலம்.௨, வசம்புத் தேறு.௪, மிளகு.௰௫, ஆடவல்லாங் கொழுந்து வேலிப் பருத்தி சமூலம் சார்வலி சமூலம். உப்பை மேனி சமூலம், நாய்வேளை சமூலம் இது வெல்லாம் கூட்டி செய் விட்டு பதமாய்க் காய்ச்சி வடித்து தாய் முலையிலும் பின்னைக்கு நாவிலும் தடவிறல் மாந்தம் தீரும். இச்சா பத்தியம்..

<u>நரம்பு சிலந்திக்கு மருந்து:-</u>

ரசம் விராகனிடை. , கொண்டு பொடுதலை சாத்தில் முறித்து வெற்றிலைக்கு தடவி புண்ணின் மேல் வைத்து கட்டி நாலா நாள் அவிழ்த்துப் போடவும் புழு விழும். இது கை கண்டது.

<u>பல் நோவுக்கு மருந்து:-</u>

கருவூமத்தம் வேரும் கெந்தகமும் இது இரண்டும் சரியாய்க் கூட்டி அரைத்துக் குழப்பி ஒரு சீலையில் தடவி திரியாகத் திரித்து விளக்கில் கொளுத்தி சட்டியில் பிடிக்க தயிலம் விழும். அந்த தயிலம் பல் நோவுக்கு வெற்றிலையில் தடவிச் சாப்பிடவும் பல் நோவு தீரும்.

<u>விஷத்துக்கு:-</u>

வெள்ளைக் காக்கணன் வேரும் இலையும் பூவும் முசுமுசுக்கை இலையும் அதின் வேரும் வெற்றிலையுங் கூட்டி பாலிலரைத்து கொடுக்க எல்லா விஷமும் முறியும்:

<u>ஸ்தனம் பெருக்க:-</u>

தவச முருங்கை இலையை எண்ணையில் காய்ச்சி வடித்து குடிக்கவும் ஸ்தனம் பெருக்கும். மறுப்பும். உடம்பு பெருகவும்.

<u>கீரை புழு விழ:-</u>

பிரண்டை வேரும் முருங்கை வேரும் கூட்டி அரைத்து காடியில் காய்ச்சி கொடுக்க கீரைப் புழு விழும். மேல் தொடர்ச்சி யில்லை.

<u>பின்னுள்ள சில ஏடுகளில் உள்ள மருந்து முறைகள் சில:-</u>

<u>மாலை கண்ணுக்கு:-</u>

எருக்கம் பஞ்சில் கள்ளிப் பால் தோய்த்து உலர்த்தி திரியாகத் திரித்து பசுவின் நெய்யில் விளக்கேற்றி மைமைப் பத்த வைத்து அந்த மையைக் கண்ணிலிட மாலைக் கண் குணமாகும்.

<u>அரையாப்புக்கு:-</u>

வாய் பேசாமல் பகவானைக் கும்பிட்டு நாயுருவி இலையைப் பரித்து நசுக்கி மற பாகமாக உள்ளங் காலில் தேய்த்து மூக்கா விறங்கெல்ல சொல்லிப் போடவும்.

மருந்தீட்டுக்கு:-

சுத்த கருத்தாட்டு பாலில் கால் படியில் ஒரு மிச்சம் புளியில் பாலில் கலந்து குடிக்க மருந்தீடு முறியும்.

அக்கினி மூல சூரணமாவது:-

காணய்யா சுக்குடன் மோடி திப்பிலி, செவியம், தும்பறுஷ்டகம், குருசாணி ஓமம், பக்குவதான சூரணம் வசம்ப, சீரகம், பறங்கிப் பட்டை, மிளகுடன் ஓமம், கக் கருஞ்சீரகம்; வெ'பாலரிசி, தக்க திப்பிலி மூலம் தாளிக்காயோடு அக்கலகாரம், நிலவேம்பு, அதிமதுரம், பக்குவமான பெருங்காயம் பார்ப்பார முள்ளி வாய் விளங்கம், மரமஞ்சள் கோஷ்டம் வளையலுப்பும் காயது நெல்லிக் கடுக்காய் சிவதை வேரும் கார் போகரிசி, தாயென தோர் ஏலம் முத்தக் காசும் சாதிக்காயும், நேயும் சித்திர மூலம் சாபத்திரி சித்தரத்தை வட்டத் திருப்பி சயிந்திர லவணம் கல்லுரம் வகைக்கொரு பலமாய் அக்கினி முப்பதின் மேலிரஞ்சும் மூலிரண்டும் வனமூலிகை யிப்படியே பலமரை வகையும் யிருபத்தொன்பது வகையும் சூரிய புடமாடியே சோதித்தெடுத்து கோரிக்கையாக நாடியே குழியுரலில் வாரிய தனைக் கூட்டியே வரிசையாக நாழி யிருவர் கூடியே நாணயமாக வகையுடன் இருவர் கூடி இடித்துக் கொண்டு வரிசையாக துகையுடன் அதனை சோதித்தெடுத்துக் கொண்டு குடிட்டமாக அகயுடன் மூவிரல் தன்னி லெடுத்துக் கொண்டு அரங்கை தன்னில் மிகையது கூட்டி உள்ளே கொண்டால் பலமென்ன மீத மீதில் சொல்வேன் வாத குரோதம் எண்பத்தாறும் வகையுடன் அக்கினி நியமாகும் சீதளம் போகும் தீபனமாகும் சென்மமும் வசீகரமி சென்மமுமாமே. அக்கினி மூல சூரணமாவது காணய்யா.

சன்னிக்கு கலிக்கம்:-

ரசம் நாபி, கெந்தகம், வெங்காரம், திப்பிலி, மாசக்காய், அரிதாரம், அப்பிரகம், வெள்ளைப் பாஷாணம், கெவுரி பாஷாணம் தொட்டி பாஷாணம் இது களெல்லாம் சுத்தி பண்ணி சமனுக் கூட்டி கைய்யாந்த கரை சாறு விட்டு நாளரைத்து ஒரு கலசத்திலிட்டு சீலை மண் செய்து குக்குட புடம் போட்டு எடுத்து வெள்ளாட்டுப் பிச்சு விட்டரைத்து உளுந்து பிரமாணம் உருண்டை பண்ணி அநுபானம் அறிந்து உள்ளுக்குங் கொடுத்துக் கலிக்கமிட பதிமூன்று வகை சன்னியும் தீரும்.

மாத்திரை கொடுக்க கசாயம்:-

சேரும் பட்டை முத்தக் காசும் நல்ல பாலை வேர், கெந்தகம் சமனுக் கூட்டி கசாயமிட்டு இந்த மாத்திரை கொடுக்க சன்னி தீரும்.

மாந்தைக்கு எண்ணை:-

அளிஞ்சிப் பட்டை பலம்.ரு, முடக் கொத்தான்இலை, சங்கங் குப்பி இலை, எருமட்டை பீனரி சங்கெலை சிறுவழுதலை வேர், ஊங் கொழுந்து கஞ்சாங் கோரை, கொட்டைக் கறந்த கருநொச்சி இலை சார், வளை கருஞ்சீரகம். கார்போக அரிசி, நீரடி முத்து வசம்பு உள்ளி ஈர வெங்காயம் இது வெல்லாம் கூட்டி இடித்து விளக்கெண்ணை நாழி கொதிக்க வைத்து அதிலே இந்த மருந்தெல்லாம் எண்ணையில் போட்டுப் பதத்தி லிறக்கி பிள்ளைகளுக்கு வார்க்கவும். பத்தியம் கடிது.

மேகத்துக்கு எண்ணை:-

விளக்கெண்ணை சேர்.க, வெங்காயம் ரசம் சேர்.க, ஆகாசத் தாமரை ரச சேர்.க, இது மூன்றும் எரிக்கிற வய்னம் கருஞ்சீரகம் விராகனிடை.க, ஏலம் விராகன்.க மிளகு விராகன்.க, நீரடிமுத்து விராகனிடை.க இது நாலும் பொடி செய்து முன் பசுரும் எண்ணையும் அடுப்பில் வைத்து பதத்தில் காய்ச்சிக் கடை மருந்துங் கூடப் போட்டு பக்குவத்திலிறக்கி ஒரு கரண்டி எண்ணை உள்ளுக்கு கொள்ளவும். உப்பு, புளி விடவும்.

மூல முறைக்கு:-

பூநாகம் விராகனிடை.க, எருக்கம் பழுப்பு மூன்று இவை வெத்திலையில்

<u>சூலை நோவுக்கு:-</u>

திப்பிலி, மிளகு, சுக்கு, ஓமம், சீரகம், சாதிக்காய், சாதிபத்திரி, குரோசாணி ஓமம், பெருங்காயம், வெள் வெங்காயம் இது வகைக்கு விராகனிடை.க, பறங்கிப் பட்டை விராகனிடை.ரு, கடைச் சரக்கெல்லாம் இளம் வறலாக வறுத்துப் பறங்கிப் பட்டை கூடப் போட்டு சூரணம் பண்ணி ஒரு சட்டியில் பசுவின் பால் வார்த்து வேடு கட்டி அதின் மேல் வெத்திலை பரப்பு அதின் மேல் முன் சூரணம் வைத்து மேல் சட்டி மூடி சீலை மண் செய்து சிறு தீயாய் எரிய விட்டு இறக்கி உலர்த்தி எடுத்து வைத்துக் கொண்டு விராகனிடை மாதிரி சாப்பிடவும். சூலை நோவு தீரும். இச்சா பத்தியம்.

<u>சுரக் குளிகை:-</u>

உத்தாமணி வேர் பலம்.க, மிளகு பலம்.க, சுக்கு பலம்.க, சிறு திப்பிலி பலம். உப்பு பலம். , எருக்கம் பழுப்பு பலம்.க இது வெல்லாம் இள வென்னீரில் அரைத்து கடலை மாதிரி குளிகை செய்து நிழலிலுலர்த்தி காச்சல் குளிருக்கு வென்னீரில் மூன்று நாள் கொடுக்கவும். காச்சலும் குளிரும் மாறும். ஒரு உருண்டை தூதுவளை இலை யிடித்து பிட்டு வைத்து பிழிந்து அந்த கசாயத்தில் வேளை கொடுக்கவும். சன்னிக்கு ஆடாதோடை சாத்தில் கொடுக்கவும். பத்தியம் கடுசாயிருக்கவும்.

<u>வயிற்று நோவுக்கு:-</u>

சுக்கு, திப்பிலி, கடுக்காய், மாதளங்காய் ---- இது சரியாய் கட்டி பொடி செய்து பனை வெல்லம் பாகு காய்ச்சி இந்தப் பொடியை அதில் போட்டு லேகம் பண்ணி கெச்சைக் காய் மாதிரி சாப்பிடவும். சூலை தீரும். வயிற்று நோவு தீரும். பத்தியம் கடிது. சார் வளை சமூலம் பெருமுட்டி வேர், சித்தா முட்டி வேர், நெரிஞ்சில் வேர், பேய்ப்புடல், விஷ்ணு காந்தி, கண்டங்கத்திரி தூதுவேளை பற்படாகம், பொன்னுங்கன்னி, நாயுருவி இது கட்டி சுக்கு கடுக்காய், திப்பிலி கூடப் போட்டு இரு நாழி தண்ணீர் விட்டு நாலிலொன்றாய்க் காய்ச்சி மூன்று நாள் இரண்டு வேளையும் சாப்பிடவும். பதினெட்டு கு----மமுந் தீரும்.

* மேல் உள்ள மந்திரம் வசியம். விடப்பட்டன.

****

சு.ச:6.3.63.

120